# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

**முறையீட்டு மனு எண்: 116/2017/மா**

**ஆணை எண்: 213/2017**

**நாள்: 24/08/2017**

திரு. பி. சக்திவேல் முருகன்,
மதுரை - 625 016. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர் (வருவாய்)
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர் மனுதாரர்

மதுரை மாநகராட்சி, விராட்டிப்பத்து, முத்துத்தேவர் காலனி, திருவாடுதுறை ஆதினம் சாலை, 2வது தெருவில் வசிக்கும் திரு. சக்திவேல் முருகன் என்பவரின் 16.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2017 அன்று பெறப்பட்டு 116/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையரின் 07.06.2017 நாளிட்ட அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாநகரம், விராட்டிப்பத்து, முத்துத்தேவர் காலனி, திருவாடுதுறை ஆதினம் சாலை, 2வது தெருவில் வசிக்கும் திரு. ப. சக்திவேல் முருகன் என்பவர், முன்பு மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிலும், பின்னர் மதுரை மாட்டுத்தாவணி காய்கறி அங்காடியில் வாடகை அடிப்படையில் தந்தை திரு. V. பழனிமுத்து என்பவரின் இருப்பிற்குப்பின் நடத்தி வரும் "V. பழனிமுத்து & சன்ஸ்" என்ற கடையின் பெயரை "M.S பழனிமுத்து & சன்ஸ்" என்று பெயர் மாற்றம் செய்து மதுரை

மாநகராட்சிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனது சகோதரர்கள் திரு. ப. சண்முகநாதன் மற்றும் திரு. ப. மீனாட்சிசுந்தரம் ஆகியோருக்கு உடந்தையாக செயல்பட்டு வரும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய்) திரு. முருகேசன் என்பவர் மீதும் தனது சகோதரர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்திடக் கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட மனுதாரரின் புகார் குறித்து மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் (வருவாய்) அறிக்கை பெறப்பட்டது. அவர் தமது 07.06.2017ம் நாளிட்ட அறிக்கையில், மனுதாரர் மதுரை மாட்டுத்தாவணி காய்கறி அங்காடி வரிவிதிப்பு எண். 6700047 கடையின் பெயர் தற்போது M/s. பழனிமுத்து & சன்ஸ் என்று இருப்பதை V. பழனிமுத்து & சன்ஸ் என்ற பெயரில் ரூ.20/-க்கான ஒப்பந்தப்பத்திரம் மாநகராட்சியிடமிருந்து கோரியதாகவும், மேற்படி ஒப்பந்தப்பத்திரம் மதுரை மாநகராட்சியில் முதன்முறையாக பொது ஏலத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் உரிமைதாரரிடம் மட்டுமே ஒப்பந்தம் செய்ய ரூ.20/-க்கான உறுதிமொழிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும், அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் அருகில் முன்பு இயங்கி வந்த சென்ட்ரல் மார்க்கெட் கடைகள் 01.09.2010 முதல் மாட்டுத்தாவணிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும், பழைய உரிமதாரர்களிடம் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றும் மனுதாரருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் அவரது முறையீடு குறித்து 11.07.2017 அன்று விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது தந்தை V. பழனிமுத்து என்ற பெயரில் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் கடை எண்.47 சுமார் 50 ஆண்டுகாலம் வியாபாரம் நடைபெற்று வந்ததாகவும் 1991ல் தனது தந்தை இறந்து விட்டதாகவும், பின்னர் மாநகராட்சியில் V. பழனிமுத்து & சன்ஸ் என்று 31.12.1994ல் கோரிக்கையின் பேரில் மாற்றப்பட்டதாகவும், பின்னர் 9.5.2000ல் ரசீது போடுவதற்குச் சென்ற போது தந்தையின் முதல் எழுத்தான 'V' ஐ விட்டுவிட்டதாகவும், திரும்பவும் நீதிமன்றம் மூலம் V. பழனிமுத்து & சன்ஸ் என்று பெயர் மாற்றம் செய்து கொடுத்தாகவும் இந்த வகைக்கு உடன்படிக்கை ஆவணம் வேண்டும் என்று கோரியதற்கு உதவி ஆணையர் திரு. முருகேசன் பழைய கோப்புகளெல்லாம் அழிந்து விட்டதாகக் கூறியதாகவும், கோப்புகள் அழிக்கப்பட்டது என்பதைவிட, மறைக்கப்பட்டு இருப்பதுதான் உண்மை என்றும் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சரியாகப் பெயர் மாற்றம் செய்ததை கணக்கில் கொண்டு புதிதாக ஒப்பந்த ஆவணம் செய்து கொடுக்க ஆவண செய்யுமாறு வேண்டியுள்ளார்.

4. முறையீட்டாளரின் புகார் குறித்து எதிர்மனுதாரரான வருவாய் உதவி ஆணையரிடம் 08.08.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டாளரின் தந்தையாருக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் பின்னர் 2010 ஆம் ஆண்டில் மதுரை மாட்டுத்தாவணிப் பகுதிகளில் கடைகள் கட்டப்பட்டு கடை எண். 350 M/s. V. பழனிமுத்து & சன்ஸ் என்ற பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2007ம் ஆண்டு மாட்டுத்தாவணிக்கு வரும் முன்பு சென்ட்ரல் மார்க்கெட் என கையால் எழுதப்பட்டு பழனிமுத்து & சன்ஸ் எம். எஸ். என்ற பெயரில் ரசீது வழங்கபட்டதாகவும், பின்னர் மனுதாரரின் கோரிக்கையின் பேரில் 2013 செப்டம்பர் மாதம் முதல் வாடகை ரசீதில் M/s. V. பழனிமுத்து & சன்ஸ் என்று கொடுத்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் 4.8.2017 அன்று மனுதாரர் நேரில் கோரியபடி M/s. V. பழனிமுத்து & சன்ஸ் என்ற பெயரில் உரிமைதாரர் பெயர் இருக்க வேண்டும் எனவும் அதற்கான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்ததின்பேரில் அவ்வாறே அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு கடிதம் எண். ம.வ.2/00140/13 நாள்:07.08.2017ல் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டு மாத வாடகை ரசீதில் மேற்சொன்ன பெயர் குறிப்பிடப்பட்டு கணிப்பொறி ரசீது அன்னாருக்கு அனுப்பப்பட்டதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், மதுரை மாநகராட்சி வருவாய் உதவி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அவர் ஆஜர்படுத்திய ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர், தமது தந்தை காலத்தில் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் மாநகராட்சியிடமிருந்து காய்கறிக் கடை ஒதுக்கீடு பெற்று 40 ஆண்டுகளாக நடத்தி வந்ததாகவும், பின்னர் மாட்டுத்தாவணி காய்கறி அங்காடிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டதாகவும், இதற்கிடையில் "V. பழனிமுத்து & சன்ஸ்" என்ற கடையின் பெயரை "M.S. பழனிமுத்து & சன்ஸ்" என்று மாநகராட்சி பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டதாகவும் இவ்வாறு தவறாகப் பதிவு செய்ததற்கு காரணம் தனது சகோதரர்கள் மற்றும் மாநகராட்சியின் முந்திய உதவி ஆணையர் (வருவாய்) என்றும் புகார் தெரிவித்துள்ளார். அவ்வாறு தவறாக பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்ட கோப்பு அழிக்கப்பட்டுவிட்டதாக மாநகராட்சியில் தமக்கு பதில் அனுப்பியுள்ளதாகவும், நீதிமன்றத் தீர்ப்பு அடிப்படையில் சரியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை கணக்கில் கொண்டு மாநகராட்சியிடமிருந்து புதிதாக ஒப்பந்த ஆவணம் செய்து கொடுக்கவும் கோரியுள்ளார். மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய்) தமது 07.06.2017ம் நாளிட்ட அறிக்கையில் மதுரை மாநகராட்சியில் பொது ஏலம் மூலம் முதன்முறையாக ஒதுக்கீடு செய்யப்படும் உரிமைதாரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் செய்யப்படுவதாகவும், பழைய உரிமைதாரர்களிடம் ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை என மனுதாரருக்கு கடிதம் மூலம்

தெரிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். உதவி ஆணையர் (வருவாய்) விசாரணையின் போது 2007ம் ஆண்டு பழனிமுத்து & சன்ஸ் எம்.எஸ். என்று கையால் எழுதப்பட்டு ரசீது வழங்கப்பட்டதை ஒத்துக் கொண்டு. பின்னர் மனுதாரரின் கோரிக்கைப்படி 2013 செப்டம்பர் மாதம் முதல் கடை வாடகை ரசீது M/s. V. பழனிமுத்து & சன்ஸ் என்று கொடுத்து வருவது தெரிய வருகிறது. மேலும் மாநகராட்சி வருவாய் உதவி ஆணையருக்கு 08.08.2017ம் நாளன்று விசாரணைக்கு ஆஜராக ஆணையிட்ட நிலையில், முறையீட்டு மனுதாரரை மாநகராட்சி ஆணையர் 04.08.2017 அன்று நேரில் அழைத்துப் பேசியதில் மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு அவ்விபரம் எண். ம.வ.2/00140/13 நாள்:07.08.2017 கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு இம்முறைமன்றத்தில் அவ்விதத்திற்கு கடித நகல் தாக்கல் செய்யப்பட்டது. கணிப்பொறி பதிவு நாளிலிருந்து மாத வாடகை ரசீதில் M/s. V.Palanimuthu & Sons என பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரிகிறது.

6. எனவே மதுரை மாநகராட்சி, முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு கணிப்பொறி ரசீதும் முறையீட்டாளர் கோரியபடியே வழங்கப்பட்டுள்ள நிலையினை மேற்படி மாநகராட்சியின் வருவாய் உதவி ஆணையர் தமது வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் ஏற்றுக் கொண்டு முறையீட்டு மனுவின் மீதான நடவடிக்கையை முடிக்கலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

31/8

பெறுநர்:

1. திரு. ப. சக்திவேல் முருகன்,
   பிளாட் எண். 24, திருவாடுதுறை ஆதினம் சாலை,
   முத்துத் தேவர் காலனி, விராட்டி பத்து,
   **மதுரை – 625 016.**

2. **ஆணையர்,**
   **மதுரை மாநகராட்சி,**
   **மதுரை.**

நகல்:
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சிப் பிரிவு – 3.
இ.கோ / உதிரிகள் – 2.